**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 02 ம் நாள் வியாழன் கிழமை,

**இ. ம எண்-347/2022 ல் அ.வ.எண்.08/2022**

செல்வி ..... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

அன்னையன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 31/01/2023 ம் தேதி இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.P.மனோகரன்**,M.A.,B.L, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.S.,ரபேல்ராஜ்**,B.A.,B.L, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் 2 -ன் கீழ் பிரதிவாதி/மனுதாரரின் பவர் ஏஜெண்ட்டாக திரு.ராயல் என்பவரை அங்கீகரித்து வழக்கினை மேல்நடத்த அனுமதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதியாவார். மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்று வருவதால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிமன்ற நடவடிக்கைகளை கவனிக்க இயலவில்லை என்பதால் இவ்வழக்கு விவரம் பற்றி அறிந்த மனுதாரரின் மகனான திரு. ராயல் என்பவரை இவ்வழக்கை நடத்தும் பொருட்டு கடந்த 05/12/2022 ம் தேதி ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளதாகவும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் திரு.ராயல் என்பவரை பவர்

ஏஜெண்ட்டாக அங்கீரித்து வழக்கினை மேல்நடத்த அனுமதிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையில், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், மனுதாரர் நல்ல உடல் நலத்துடன் இருந்து வருகிறார் என்றும், நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

5. ஆவணங்களை கண்ணுற்றதில், இம்மனுவை அனுமதிக்க எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இம்மனுவுடன் வாதி தரப்பில் திரு.ராயல் என்பவருக்கு வாதியால் எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பரிசீலித்தும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டங்களும் ஏற்பட போவதில்லை என்பதாலும், மாறாக இம்மனுவை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில், வாதி/மனுதாரருக்கு அவர் தரப்பு வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதாகிவிடும் என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின், இன்று (02/03/2023) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**திருவிடைமருதூர்**

**இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**திருவிடைமருதூர்**